1973 பிப்ரவரி 8]

THIRU B. VENKATASAMI: Contractors are finding it difficult so as to carry on their work because of increase in cement rate. May I know from the Hon. Chief Minister whether they are going to enhance the rate for contractors in the National Highways and Public Works Departments?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பொதுப்பணித் துறையிலே கேட்கப் படவேண்டும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, சிமிண்ட் விலை அதிகமாக உண்மையிலேயே வெளிமார்க்கட்டிலே, கள்ளமார்க்கட்டிலே விற்கப்படுகிறது. அதை அரசு கண்காணிக்கவேண்டும். மின்சாரப் பற்றுக்குறை இருப்பதன் காரணமாக இப்படியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் வெளி மாநிலங்களிலிருந்து சிமிண்ட் வரவழைத்து நியாயமான விலையில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிமிண்ட்டை பொறுத்தவரையில் நாம் தான் அதிகமாக உற்பத்திசெய்கிறோம். வட மாநிலங்களுக்கு நாம் கொடுக்கவேண்டுமா என்பதுதான் இப்பொழுது கேள்வி. மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் சொன்னதைப்போன்று இடைக்கால சங்கடங்கள் ஏற்பட்டு இருக் கின்றன. விலை கூட விற்கிறார்கள் என்று தகவல்கள் தந்தால் அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு நாம் தெரிவிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, சிமிண்ட் விலை கூட்டி விற்கிறார்கள் அது மட்டுமல்ல, கலப்படம் செய்கிறார்களே, அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படித் தகவல் என்னிடத்தில் இல்லை. இருப்பதாகத் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்.

அரக்கோணம் நிலவள வங்கி.

* 74 வினு—திரு. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்தில் உள்ள கூட்டுறவு நிலவள வங்கியின் நிர்வாக சபை கலைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) நிர்வாகம் செவ்வனே நடைபெறவில்லை என்பது காரணம்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இப்படி பொதுவாக நிர்வாகம் சரியாக நடக்காத வங்கிகளையும் ஓவர்டியூ இருக்கிற வங்கிகளையும் கலைக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நிர்வாகம் சரியில்லாத வங்கிகளில் வேறு நிர்வாகம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நிர்வாகம் சரியில்லாத காரணத்தினால் 3—7—1971 அன்று கலைக்கப்பட்டு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். தனி அதிகாரி நியமிக்கப்பட்டது தொடங்கி அவ்வங்கி சற்றுச் சீராக நடைபெற்று வருகிறது. அதற்கு நான்காண்டுகளுக்குள்ளாக மறு தேர்தல் நடத்தி மறுபடியும் நிர்வாக கமிட்டி அமைக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நிர்வாகம் சரியில்லை என்றால், சில வங்கிகளுக்கு உங்கள் ஆபீசர்களைக் கொடுத்து வசூல் செய்கிறீர்கள். அப்படி இதற்குக் கொடுக்கப்பட்டதா? மறு தேர்தல் நடத்த நான்கு ஆண்டுகள் ஆகும் என்று சொன்னார்கள். நான்காண்டுக் காலம் ஏன் ஆகும் என்பதையும் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இது தனியாக மானேஜர் போட்டு நிர்வாகக் கமிட்டியை அப்படி வைத்துக் கொண்டு நடத்தப்படுகிற வங்கியாக இல்லை. நிர்வாகம் சரியில்லை. அதனால்தான் கலைக்கப்பட்டு தனி அதிகாரி பொறுப்பில் நடைபெற்று வருகிறது. நான்கு வருடங்கள் ஏன் என்று கேட்டார்கள். சட்டத்திலே 72-வது விதியைத் திருப்பிப் பார்த்தால் தெரியும், நான்கு வருடம் என்று இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : That is the maximum period allowed. He can still form the Board earlier within that period. Will the Government take steps to do that?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான்கு வருடத்திற்கு உள்ளாகச் சீரடைந்துவிட்டால் அதற்குள்ளேயே செய்யலாம்.

திரு. நா. வீராசாமி: நிர்வாகம் சரியில்லை என்று சொன்னார்கள். நிர்வாகம் சரியில்லை, தவறுகள் நடந்தன என்று பத்திரிகையிலேயெல்லாம் செய்திகள் வந்தன. என்ன என்ன தவறுகள் நடந்தன, யார் யார் தவறு செய்தார்கள். ஏதாவது கிரிமினல் வழக்குப் போடப்பட்டு இருக்கிறதா? இல்லையென்றால் போடப்படுமா?

1973 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கிரிமினல் வழக்கு போடப்பட வில்லை. 1965-வது வருடத்திலிருந்து தொடர்ந்து நஷ்டத்திலே நடைபெற்று வருகிறது. தொடர்ந்து நஷ்டத்திலே நடைபெறுகிறது என்பதே தவறு தான். தணிக்கை அதிகாரிகள் சுட்டிக்காட்டிய தவறுகள் நீக்கப்படவில்லை. தவணை தவறிய கடன் 15% க்கு மீறக்கூடாது என்ற ரிசர்வ் பாங்கி விதியை மீறினார்கள்.

Thanjavur District Co-operative Central Bank

* 75 *Q*.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that there are charges against the Chairman of the Thanjavur District Central Co-operative Bank ; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம் .

(இ) மேல் நடவடிக்கை எடுக்கப் படுவதற்குக் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தத் தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே குறைவான தொகை 2 லட்சம் ரூபாய் என்று சொல்கிறார்களே, இம் மாதிரி மற்ற வங்கிகளில் ஏற்படாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கையாடல் செய்யப்பட்டு வராமல் இருப்பது சுமார் 2 லட்சம் அல்ல, 2 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய் மத்திய வங்கி லிருந்து, கிராம நாணய சங்கத்திற்குக் கொடுத்ததாகக் கணக்கு எழுதப்பட் டிருக்கிறது. அதில் ஏறத்தாழ 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ இன்னும் 50 ஆயிரம் ரூபாய் பாக்கியிருக் கிறது. இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்காக வங்கிகளின் விதிகள் திருத்தப்பட இருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த வங்கியிலே சேர்மன் மீது தான் குற்றச்சாட்டு உள்ளதா ? அல்லது ஊழியர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் உள்ளதா ? விசாரணை எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சேர்மன் மட்டுமல்ல அதற்குப் பொறுப்பு. ஆறு பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள், இதையொட்டி,